Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Arulmigu Papanasa Swamy – Arultharum Ulagammal Temple

**Dr S.S.Ponsakthikala,** Assistant Professor of Tamil,
Sadakatullah Appa College, Tirunelveli,Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-6975-7691**
**DOI: 10.5281/zenodo.6622311**

## Abstract

*The human race has a long history. The man who initially lived with animals has undergone various changes in life over time. His cultures and habits were constantly changing. Nature appears as various forces and makes man live. humans have no life without the accompaniment of the beliefs in God. Therefore, the man worshipped them for his well-being. He gave various names and images to the Gods and built temples to worship them. Not only that, he worshipped as gods the noble men, knights, and sacrificial men who sacrificed their lives for the good sake of humanity. It was the nature of the Tamil people to worship such deities in the temples. They are widely seen in the temples of the villages in Tamil Nadu. Kings and people built temples to the Gods as best they could to glorify them. The purpose of this article is to explore the Arulmigu Papanasa Swamy Temple, one of the most ancient temples built on the banks of the Tanpurunai River.*

**Keywords:** Ulagamman, Papanasa Swami, Temple.

## References

[1] Gandhi. K. *Tamilar Palakavalgangalum Nambikkaigalums.* International Institute of Tamil Studies, Chennai, 2002.
[2] Somale. *Tamil Nattu Makkalin Marapum Panpatum*. National Book Trust, India, 1975.
[3] Paramasivanandam. A.M. *Tamil Nattu Vilakkal.* Tamilkalai Pathipagam, Chennai, 1962.
[4] Thavatthiru Kunrakkudi Adigalar. *Alayangal samuthaya mayangal.* Kalaivani Puthagalayam, Chennai - 1987.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# அருள்தரும் உலகம்மன் உடனுறை அருள்மிகு பாபநாசசுவாமி திருக்கோவில்

**முனைவர் சு.செ.பொன்சக்திகலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0001-6975-7691

**DOI: 10.5281/zenodo.6622311**

**ஆய்வுச்சுருக்கம்**

*மானிட இனம் நீண்டகால வரலாற்றைக் கொண்டது. தொடக்கத்தில் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதன் காலங்கள் செல்லச் செல்ல, வாழ்வில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டான். அவனது பண்பாடுகளும், பழக்கவழக்கங்களும் மாறிக் கொண்டே வந்தன. இயற்கை பல்வேறு சக்திகளாகத் தோன்றி மனிதனை வாழ வைக்கின்றது. ஐம்பெரும் பூதங்களும், பரிதியும், நிலவும் இல்லையேல் உயிரினங்களுக்கு வாழ்வு இல்லை. எனவே, தனக்கு நல்வாழ்வு மலர வேண்டி மனிதன் அவற்றை வணங்கினான். அச்சக்திகளுக்குப் பல்வேறு பெயர்களும், உருவங்களும் தந்து அவற்றிற்குக் கோவில் எழுப்பி வழிபட்டு வந்தான். அது மட்டுமின்றி, பல குடிகளிலும் தோன்றிய உயர்ந்த மனிதர்களையும், மாவீரர்களையும், தியாக சீலர்களையும் தெய்வங்களாக வணங்கினான். அத் தெய்வங்களை உள்ளக் கோவிலில் அமர வைத்துப் பின்னர் ஊர்க் கோவில்களிலும் கண்டு வணங்கி மகிழும் இயல்பு தமிழ் மக்களிடத்தில் நிறைந்திருந்தது. எப்பொருளுக்கும் இறைத்தன்மையை ஏற்றி, நிலமகளாக, திருமகளாக, கலைமகளாக, வெற்றிமகளாக வணங்கி வாழ்த்தும் தன்மையும் அவர்களிடத்தில் உண்டு. மன்னர்களும், மக்களும் தம்மால் இயன்ற நிலைகளில் தத்தம் தெய்வங்களுக்குக் கோவில்களைத் தோற்றுவித்தனர். அவ்விதம் தண்பொருநை ஆற்றங்கரையில் உருவாக்கப்பட்ட தொன்மை வாய்ந்த கோவில்களில் ஒன்றான அருள்மிகு பாபநாச சுவாமி கோவிலை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** உலகம்மன், பாபனாசசுவாமி, கோவில்.

**முன்னுரை**

மானிட இனம் நீண்டகால வரலாற்றைக் கொண்டது. தொடக்கத்தில் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதன் காலங்கள் செல்லச் செல்ல, வாழ்வில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டான். அவனது பண்பாடுகளும், பழக்கவழக்கங்களும் மாறிக் கொண்டே வந்தன. இயற்கை பல்வேறு சக்திகளாகத் தோன்றி மனிதனை வாழ வைக்கின்றது. ஐம்பெரும் பூதங்களும், பரிதியும், நிலவும் இல்லையேல் உயிரினங்களுக்கு வாழ்வு இல்லை. எனவே, தனக்கு நல்வாழ்வு மலர வேண்டி மனிதன் அவற்றை வணங்கினான். அச்சக்திகளுக்குப் பல்வேறு பெயர்களும், உருவங்களும் தந்து அவற்றிற்குக் கோவில் எழுப்பி வழிபட்டு வந்தான். அது மட்டுமின்றி, பல குடிகளிலும் தோன்றிய உயர்ந்த மனிதர்களையும், மாவீரர்களையும், தியாக சீலர்களையும் தெய்வங்களாக வணங்கினான். அத் தெய்வங்களை உள்ளக் கோவிலில் அமர வைத்துப் பின்னர் ஊர்க் கோவில்களிலும் கண்டு வணங்கி மகிழும் இயல்பு தமிழ் மக்களிடத்தில் நிறைந்திருந்தது. எப்பொருளுக்கும் இறைத்தன்மையை ஏற்றி,

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

நிலமகளாக, திருமகளாக, கலைமகளாக, வெற்றிமகளாக வணங்கி வாழ்த்தும் தன்மையும் அவர்களிடத்தில் உண்டு. மன்னர்களும், மக்களும் தம்மால் இயன்ற நிலைகளில் தத்தம் தெய்வங்களுக்குக் கோவில்களைத் தோற்றுவித்தனர். அவ்விதம் தண்பொருநை ஆற்றங்கரையில் உருவாக்கப்பட்ட தொன்மை வாய்ந்த கோவில்களில் ஒன்றான அருள்மிகு பாபநாச சுவாமி கோவிலை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தலபுராணம்**

முக்களாலிங்க முனிவர் பாபநாசத்தலபுராணம் பாடியுள்ளார். வடமொழியில் சூத முனிவர் பாடியதை முக்களாலிங்க முனிவர் தீந்தமிழ் இயற்றினார். இது 35 சருக்கங்களைக் கொண்டது. சையமலையைச் சேரனுக்கும், தருக்க மலை சோழனுக்கும், பொதிகை மலை பாண்டியனுக்கும் எல்லை வரையறுத்துக் கொடுத்து மகுடம் சூட்டியவர் பாபநாசர், விக்கிரமபாண்டியன் சிறந்த சிவ பக்தன். சிவபூத கணங்களே அவனுக்குப் படை. இப் படை பாபநாசப் பெருமான் கொடுத்தது. பொதிகை முதல் இமயம் வரை சென்று வென்றான் என்று கூறப்படுகிறது. தேவேந்திரன், அகத்தியர், காசியபர், விராட்டு, மறைகள், சந்திரபாண்டியன், கருணாகரபாண்டியன், இராச இராச பாண்டியன், சுந்திரன், அரிகுத்தன் ஆகியோருக்கும் பாவநாசர் அருள்பாலித்திருக்கிறார்.

ரிக், யசூர், சாமம் என்னும் மூன்று வேதங்கள் முக்களாவாகி (மரமாகி) வழிபட்டன. இராச இராச பாண்டியன் தவம் செய்திருக்கும் போது கண்ட அகத்தியர் அவன் தம்மை மதியாது இருந்தான் என எண்ணி அவர் கொடுத்த சாபத்தால் மன்னன் காட்டானையாகி, நாரதர் சாபத்தால் முதலையான வித்தியாதரனால் விழுங்கப்பெற்ற போது திருமால் முதலையைக் கொல்ல பாவநாசர் அருளால் முதலையும், யானையும் நன்னிலையடைந்தன. சுந்தரன் என்னும் பிராமணன் தன் கூடா ஒழுக்கத்திற்குப் பொருள் தராத தாய் தந்தையரைக் கொன்ற பாவத்தை இங்கு வந்து தீர்த்தான். ஊழ்வினைப் பயத்தால் பிரிந்து சென்ற அரிகுத்தனும், அவன் சகோதரியும் காசியிலே ஒன்று கூடி ஒருவரை ஒருவர் அறியாது காதல் கொண்டு மணந்து பின் உண்மை அறிந்;து வருந்தி அப்பாவம் தீர கருப்பு உடை உடுத்தி திரிந்து இங்கே வந்து வணங்கி வெள்ளுடையாகப் பெற்று பாவம் தீர்த்தனர்.

**இறைவன் / இறைவி பெயர்**

உலகம்மன் உடனுறை பாபவிநாசர்

**ஆகமம்**

காமிக ஆகமம்

**நடை திறப்பு**

காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரை

மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

**அமைவிடம்**

அம்பாசமுத்திரத்திரத்திலிருந்து மேற்கே 9 கி.மீ தொலைவில் தாமிரபரணி ஆற்றின் இடப்புறத்திலுள்ளது.

**கோவில் அமைப்பு**

கிழக்கு நோக்கிய ஏழுநிலை இராஜகோபுரம், திண்ணை மண்டபம், குடவாயில் மண்டபம், சபாபதி மண்டபம், நந்தி மண்டபம், கொடியேற்று மண்டபம், அபிஷேக மண்டபம், ஸ்நபந மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம்.

சுவாமி சன்னதியின் இடப்புறத்தில் அம்பாள் சன்னதி தனியே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோவிலில் வெளியே வசந்த மண்டபமும், ஆற்றின் கரையில் தீர்த்தவாரிமண்டபமும் உள்ளது. இரண்டு திருச்சுற்றுகள் உள்ளன.

**திருவிழா சிறப்புகள்**

பிரம்மோற்சவம் சித்திரை விசுவினை ஒட்டி 11 நாட்கள் கொண்டாடப்படுகிறது. பிரம்மோற்சவச்சிறப்பாக தெப்பம், தேரோட்டம், அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டும் நிகழ்ச்சி காணப்;படுகின்றன. மார்கழி மாதம் 10 நாட்கள் திருவாதிரை உற்சவம் கொண்டாடப்படுகின்றது. புரட்டாசி நவராத்திரியில் பரிவேட்டைத் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

**உள்ளூர் மரபுகள்**

உரலில் மஞ்சளை இட்டு, அதை இடித்து, திருமணமானவர்கள் தாலியிலும், திருமணம் ஆகாதவர்கள் நெற்றியிலும் பூசும் மாங்கல்ய தீர்க்கம் எனப்படும் நிகழ்வு இத்தலத்திற்கே உரியதாகும்.

**தலவிருட்சம்**

**முக்களா மரம்**

**அரிய சிற்பங்கள் / ஓவியங்கள்**

கல்யாண சுந்தரர் சன்னதியில் மூலவலாகக் காட்சியளிக்கும் கல்யாண சுந்தரர் ஒரே கல்லில் விடை வாகனத்துடன் காணப்படுவதும், சுவாமி கருவறை வெளிப்புறச் சுவரில் ஏகபாத மூர்த்தி, ரிஷிகள், இறைவனுடைய திருக்கோலங்கள், புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுவதும், நடராசர் சன்னதியில் உள்ள சபாபதி "புனுகு சபாபதி" என்ற பெயருடன் காணப்படுவதும் அரிய சிற்பங்களாகக் கொள்ளப்படுகின்றன.

**கல்வெட்டுகள்**

சுவாமி சன்னதி முன்புறம், தூண்கள், அம்மன் சன்னதி பின்புறத்தில் கல்வெட்டுகள் உள்ளன.

**இலக்கியங்கள்**

நமச்சிவாயக் கவிராயரால் இயற்றப்பட்ட பாவநாசத் தலபுராணம், உலகம்மைப் பிள்ளைத்தமிழ், உலகம்மை வெண்பா ஆகிய இலக்கியங்கள் உள்ளன.

**முடிவுரை**

தமிழ்ச் சமுதாயத்தில் ஆலயம் என்பது இன்றியமையாத ஒரு கூறாகும். சமுதாயத்தின் வெகுவான செயல்பாடுகள் கோவில்களில் வைத்தும், கோவில்களை மையப்படுத்தியுமே அமைகின்றன. "குடிகளைத் தழுவிய கோவில்கள், கோவிலைத் தழுவிய குடிகள்" என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் உரைப்பார். அதற்கேற்பக் கோவில்கள் இன்றியமையாத தன்மையுடன் விளங்கின. அரசன் முதல் ஆண்டி வரை கோவில்களை மதித்துப் போற்றி வணங்கினர். அறச்சாலைகளாகவும் அறங்கூற வையங்களாகவும், கலை வளர்க்கும் இடங்களாகவும் கோவில்கள் திகழ்ந்தன. எனவே மக்கள் வாழுமிடங்களெல்லாம் கோவில்கள் உருவாகின. மக்களின் பங்கேற்புக்கு ஏற்ப அவை வளர்ச்சி பெற்றன. ஆற்றங்கரை நாகரிகம் உருவாகி வளர்ந்ததால், பொருநைக் கரையெங்கும் பெருங்கோவில்கள் தோன்றிச் சிறப்புப் பெற்றன. இப்பெருங்கோவில்கள் வழிபடும் தலங்களாக மட்டுமின்றி, மக்களின் பண்பாடு, கலையுணர்வு, சமூக ஒருங்கிணைப்பு போன்றவற்றைப் பிரதிபலிக்கும் சமூகக் கண்ணாடிகளாகவும் உள்ளன. பொருநைக் கரையில் தோன்றிய சிவாலயங்கள் மூர்த்தி, தலச்சிறப்பு, தீர்த்தம், தலபுராணம் போன்றவைகளால் தனிச் சிறப்புப் பெற்றவையாகும்.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**துணை நூற்பட்டியல்**

[1] காந்தி.க. *தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.

[2] சோமலே, *தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்*. நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1975.

[3] பரமசிவானந்தம். அ.மு. *தமிழ் நாட்டு விழாக்கள்*. தமிழ்க்கலை பதிப்பகம், சென்னை, 1962.

[4] தவத்திரு குன்றக்குடி அடிகளார். *ஆலயங்கள் சமுதாய மையங்கள்*. கலைவாணி புத்தகாலயம், சென்னை - 1987.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.